**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 291/மா/2023**

**நாள்:31.10.2023**

திரு.பொன் சாமுவேல்,
ஆவடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, மிட்டணமல்லி, வள்ளுவர்தெரு, எண்.09 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பொன்சாமுவேல் என்பவரின் 31.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2023–ல் பெறப்பட்டு, 291/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, மிட்டணமல்லி, வள்ளுவர்தெரு, எண்.09 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பொன்சாமுவேல் என்பவர் தனது 31.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான மிட்டணமல்லியில் உள்ள சர்வே எண்.280/4 பாலார்குளம் 84 செண்ட் உள்ளது. இந்த குளத்தில் 46 செண்ட்டில் மட்டுமே தூர்வாரும் பணிகள் செய்து உள்ளனர். மீதமுள்ள 40 செண்ட் நிலப்பரப்பை ஆக்கிரமிப்பு செய்து விற்பனை செய்து உள்ளனர். இதில் சுற்று சுவர் எழுப்பப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்புப்படி ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஆவடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் திருமதி.ஷோபனா தேவி அவரது சுயநலத்திற்காக ஆக்கிரமிப்பு செய்த நபர்களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருகிறார். சர்வே எண்.265ல் 46 செண்ட் அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை நிலம் உள்ளது. பரத் அவன்யு ரியல் எஸ்டேட் அதிபர் பிளாட் எண் 29/1165–ல் 20 செண்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இதன் மதிப்பு 30 லட்சம் ஆகும். இதற்கு சட்டத்திற்கு புறம்பாக ஆவடி மாநகராட்சி நகரப்பிரிவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தக்கட்டிடம் மீது நடவடிக்கை எடுத்து சீல்வைக்க உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) மனுதாரர் 12.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" ஆவடி மாநகராட்சி மிட்டணமல்லி சர்வே எண் 280/4ல் பாலார்குளம் உள்ளது. மொத்தம் 86 செண்ட் இடத்தில் அமைந்துள்ள இக்குளத்தில் 46 செண்ட் தூர்வாரும் பணிகள் நடைபெற்றுள்ளது. மீதமுள்ள 40 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து விற்பனை செய்து உள்ளனர். ஆவடி மாநகராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் அலுவலர்கள் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றாமலும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர். பரத் அவென்யு என்கின்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர் சர்வே எண்.262/1A/2A 46 அடி, மிட்டணமல்லி ஏரிக்கு செல்லும் 46 அடி கால்வாயை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இது தொடர்பாகவும் பலமுறை புகார்கள் கொடுத்தும் ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருகின்றனர். மேலும் மாநகராட்சி அதிகாரிகள் கால்வாய்க்கு நகரமைப்பு பிரிவில் மனை அனுமதி மற்றும் கட்டிட அனுமதி அளித்து உள்ளனர்.

எனவே மேற்கண்ட பாலார்குளம் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றிடவும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கத்தவறிய ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் 31.08.2023 நாளிட்ட எனது புகார் மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) ஆவடி மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் இருவரும் 12.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

"ஆவடி மாநகராட்சி மிட்டணமல்லி கிராமம் நகர புல எண் 5/2 பழைய புல எண் 280/4–ல் உள்ள பாலார்குளம் சர்க்கார் புறம்போக்கு (குட்டை)வகைப்பாட்டில் உள்ளது. மேற்கண்ட இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதல்ல. எனினும் மனுதாரரிடமிருந்து மேற்கண்ட இட ஆக்கிரமிப்பு குறித்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட இடத்தை நில அளவீடு செய்திட ஆவடி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும், நில அளவு குறித்த அறிக்கை இன்னும் பெறப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று சர்வே எண். 262/1A2A மிட்டணமல்லி ஏரிக்கு செல்லும் கால்வாயை பரத் அவென்யு என்கின்ற ரியல் எஸ்டேட் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த புகார் மனுவையொட்டி வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டது. ஆவடி வட்டாட்சியர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் மிட்டணமல்லி கிராமம், வார்டு A பிளாக் 35, நகர புல எண் 7/2 பழைய சர்வே எண்.262/2A சர்க்கார் புறம்போக்கு (வாய்க்கால்) வகைப்பாட்டில் அமைந்துள்ளது எனவும், ஆக்கிரமிப்பு ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இரண்டு இடங்களின் "அ" பதிவேட்டின் நகல்களை இன்னும் ஒரு வார காலத்தில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் இம்முறைமன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 11.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6) **ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 11.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்**:-

" மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள மிட்டணமல்லி கிராமம் சர்வே எண்.280/4–ல் அமைந்துள்ள, இடத்தினை தூர்வாரி ஆழப்படுத்த ரூ.20,36,349 –மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. புகாரின் பேரில் மேற்படி குளத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா எனவும் புலத்தணிக்கை செய்து அறிக்கை அனுப்ப ஆவடி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆவடி வட்டாட்சியர் தனது கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், மிட்டணமல்லி கிராமம், வார்டு A பிளாக் 35 நகரபுல எண்.5/2, பழைய புல எண் 280/4 சர்க்கார் புறம்போக்கு (குட்டை) வகைப்பாட்டில் உள்ளடங்குகிறது. இப்பகுதி மழைநீர் சூழ்ந்து சகதியாக உள்ளதால் நில அளவை செய்ய இயலவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வட்டாட்சியரால் நில அளவைப் பணி முடிக்கப்பெற்று அறிக்கை பெறப்பட்டவுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இப்புகாரின் மீது இறுதியான அறிக்கை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வட்டாட்சியரின் கடிதத்தில் மிட்டணமல்லி கிராமம் வார்டு A பிளாக் 35, நகர புல எண்.7/2, பழைய சர்வே எண்.262/2, சர்க்கார் புறம்போக்கு (வாய்க்கால்) வகைப்பாட்டில் அமைந்துள்ளது எனவும், மேற்படி புலத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வட்டாட்சியரின் அறிக்கையின்படி மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ளவாறு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

மிட்டணமல்லி கிராம் சர்வே எண்.265 வண்டிப்பாட்டையில் பிளாட் 29, சதுர அடி மனைக்கு சட்டத்திற்கு புறம்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது. மேற்படி புலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா என புலத்தணிக்கை செய்து அறிக்கை அனுப்ப வட்டாட்சியரிடம் கோரப்பட்டதில் வட்டாட்சியரிடமிருந்து இப்புலத்தின் மீது ஆய்வு செய்து அறிக்கை பெறப்படவில்லை. வட்டாட்சியரின் அறிக்கை பெற்றவுடன் மாநகராட்சியால் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இப்புகாரின் மீது இறுதி அறிக்கை சமர்ப்பிக்க கூடுதல் கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) **முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, உதவிப்பொறியாளர் மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன**:

மனுதாரர் ஆவடி மாநகராட்சி மிட்டணமல்லி சர்வே எண் 280/4ல் பாலார்குளம் உள்ளது. மொத்தம் 86 செண்ட் இடத்தில் அமைந்துள்ள இக்குளத்தில் 46 செண்ட் தூர்வாரும் பணிகள் நடைபெற்றுள்ளது. மீதமுள்ள 40 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து விற்பனை செய்து உள்ளனர். பரத் அவென்யு என்கின்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர் சர்வே எண்.262/1A/2A 46 அடி, மிட்டணமல்லி ஏரிக்கு செல்லும் 46 அடி கால்வாயை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இது தொடர்பாகவும் பலமுறை புகார்கள் கொடுத்தும் ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை

எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருகின்றனர். மேலும் மாநகராட்சி அதிகாரிகள் கால்வாய்க்கு நகரமைப்பு பிரிவில் மனை அனுமதி மற்றும் கட்டிட அனுமதி அளித்து உள்ளனர். எனவே மேற்கண்ட பாலார்குளம் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றிடவும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கத்தவறிய ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

ஆவடி மாநகராட்சி அலுவலர்கள், ஆவடி மாநகராட்சி மிட்டணமல்லி கிராமம் நகர புல எண் 5/2 பழைய புல எண் 280/4–ல் உள்ள பாலார்குளம் சர்க்கார் புறம்போக்கு (குட்டை) வகைப்பாட்டில் உள்ளது. மேற்கண்ட இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதல்ல. எனினும் மனுதாரரிடமிருந்து மேற்கண்ட இட ஆக்கிரமிப்பு குறித்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட இடத்தை நில அளவீடுசெய்திட ஆவடி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நில அளவு குறித்த அறிக்கை இன்னும் பெறப்படவில்லை என்றும் அதேபோன்று சர்வே எண். 262/1A2A மிட்டணமல்லி ஏரிக்கு செல்லும் கால்வாயை பரத் அவென்யு என்கின்ற ரியல் எஸ்டேட் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த புகார் மனுவையொட்டி வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டது. ஆவடி வட்டாட்சியர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் மிட்டணமல்லி கிராமம், வார்டு A பிளாக் 35, நகர புல எண் 7/2 பழைய சர்வே எண்.262/2A சர்க்கார் புறம்போக்கு (வாய்க்கால்) வகைப்பாட்டில் அமைந்துள்ளது எனவும், ஆக்கிரமிப்பு ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இரண்டு இடங்களின் ' அ ' பதிவேட்டின் நகல்களை இன்னும் ஒரு வார காலத்தில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அனுப்பிய பிறகே புலத்தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வட்டாட்சியருக்கு மாநகராட்சியால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இதுநாள் வரை 'அ' பதிவேட்டின் நகல்கள் ஆவடி மாநகராட்சியால் சமர்ப்பிக்கப்படவில்லை.

நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிட மாண்பமை உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்தால் பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**<u>Smt.Logammal vs. The District Collector, 22.06.2019 – Madras High Court. Para 17</u>**

i) It is clear that all "Kuttai Poramboke" "Pond Poramboke" and other Poramboke lands belongs to the Government are to be preserved for protecting the environment and for the usage of the public at large. There cannot be any leniency or misplaced sympathy in respect of such encroachments of the Government land and the authorities competent are duty bound to protect the same in all respects.

**<u>M.J.David Vs. The District Collector, Madras High Court, 26.9.2018 Para 11</u>**

(ii) The legal Principles in this regard, are now settled and encroachments in water bodies and water resources are to be evicted in the interests of public at large and in order to protect the water resources to the State. In the event of allowing such encroachments in water bodies and water resources, the same will cause not only damage, but also will create flood related disasters, more specifically during rainy season. Thus, neither the Government nor the courts can encourage such encroachments in respect of water bodies and water resources and immediate actions are to be initiated to evict all such encroachments in water bodies and water resources.

**iii) Supreme Court of India, Civil Appeal No.1251 of 2006**

The natural resources of earth including the air, water, land, Flora and Fauna and especially representative samples of natural ecosystem must be safeguarded for the benefits of present and future generations through careful planning or management. Thus, there is no doubt the fact that there is a responsibility bestowed upon the Government to protect and preserve the tanks and its supply channels which are important part of the environment of the area.

**iv)Madras High Court, L.Krishnan vs. State of Tamil Nadu date 27.06.2015, para 14.**

In as much as this writ petition has come before us by way of public interest litigation, we take this opportunity to direct the State Government to identify all such natural water resources in different parts of the State and wherever illegal encroachment, are found, initiate appropriate steps in accordance with the relevant provision of law for restoring such natural water storage resources which have been classified as such in the revenue records to its original position.

**Madras High Court issued Slew of Directions to remove encroachments from water bodies on 28 Jan, 2022**

Issuing a slew of directions on top of the directions already in force, the Madras High Court has underscored that there will be no leniency towards water body encroachments and land grabbers. The court has made it clear in batch of writ petitions seeking directions to prevent widespread encroachment that it won't allow the encroachers peacefully enjoy the properties listed as water bodies.

**Madras High Court unhappy with non-compliance of its orders to evict encroachments from water bodies.**

Warns the Tamil Nadu Government that it might be constrained to summon the Chief Secretary if the directions were not complied with in letter and spirit within 10 days.

The Madras High Court, on Monday, expressed its displeasure over non-compliance of a slew of directions issued by it to the Tamil Nadu Government on January 27 to prevent unauthorized occupation of lands classified as water bodies in revenue records. The court warned that it would be constrained to summon the Chief Secretary if its orders were not implemented in letter and spirit within the next 10 days.

Miffed over a number of writ petitions continued to be filed regarding alleged encroachment of water bodies, the first Division Bench of Chief Justice Munishwar Nath Bhandari and Justice N.Mala wondered why the Government had not implemented the January 27 order effectively. The court also imposed costs to Rs.25,000 on one of the Government officials for having failed to remove encroachments.

மேற்கண்ட தீர்ப்புகளை ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் கவனத்தில் கொள்ளவில்லையென தெரிய வருகிறது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் திரு. பொன்சாமுவேல் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமானதாக இருப்பின் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுத்திட ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

அரசாணை (நிலை) எண்.186, வருவாய் (நி மு 1 (2) துறை நாள். 29.04.2003–ல் ஓடை, வாய்க்கால், குளம், குட்டை மற்றும் ஆற்று புறம்போக்கு முதலிய அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்மந்தமாக 20.01.1987 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண்.41–ஐ அரசு மறு பரிசீலனை செய்தது. இனி வரும் காலங்களில் அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு பாதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடப்பட்டுள்ளது:–

(i) குளம், குட்டை, ஓடை புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, ஆற்று புறம்போக்கு, நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் நீர்வழி புறம்போக்குகள், நீர்ப்பிடிப்புபகுதிகள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை எனகருதப்படுவதால் அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ii) நீர்வழி நீர்நிலை புறம்போக்குகள் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் செயற்குறிப்புகளுக்கு, முழுமையான தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.41, வருவாய் (எல்) துறை, நாள்.20.01.87–ல் உள்ள தடையாணையினை அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் வழுவாது வலிந்து செயல்படுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(iii) அரசாணை (நிலை) எண்.865, வருவாய்த்துறை, நாள் 31.08.1996–ல் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து ஒப்படை செய்வது குறித்து

பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(iv) ஆக்கிரமிப்புகள் அகற்றுவது சம்பந்தமாக 07.03.2001 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண்.05–ல் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான குழுவின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அனைத்து மாவட்டங்களிலும் நீர்நிலை, நீர்வழி புறம்போக்குகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அகற்றும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(v) வருங்காலங்களில் அனைத்து நீர்நிலை மற்றும் நீர்வழி புறம்போக்குகளில் எழும் ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அனைத்து பொதுப்பணித்துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பு, பிற துறை சார்ந்ததாக இருப்பின் அத்துறை மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி உரிய மேல் நடவடிக்கை தொடருமாறு ஆவடி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The District Collector of Thiruvallur is directed to entrust the work of identifying the ownership of this tank whether belonging to Revenue/Corporation/P.W.D. and inspecting the water bodies for encroachment to the R.D.O. of the division in a time bound manner. If such encroachments are permitted without taking necessary departmental action in a prompt manner the land grabbers of the area would be encouraged to swallow valuable promboke lands at an astronomical price. The report of the Avadi Corporation is not satisfactory in as much as the local Corporation officials had not reported such alleged encroachments, to Revenue authorities. By suitably sending letters to the Thasildar for suvey and confirmation of encroachment on water bodies and such Government promboke valuable time is lost and the antisocial elements spread their land grabbing tentacles far and wide. The Corporation local officials' connivance in this case can not be brushed aside. The Commissioner Avadi Corporation is directed to co-ordinate with Revenue authorities to curb any encroachments, within the Corporation limits especially in cases like this where desilting has been carried out in a extent of 46 cents in Palarkulam water body. The balance 40 cents extent has been annexed by some antisocial elements and sold according to the petitioner. The Town Planning Officer and Assistant Engineer who promised to submit 'A' register copy to examine the classification nature and ownership department has not produced the same raising suspicion against the officials. The D.M.A. is directed to watch the handling of this issue by the Avadi Corporation in the light of the orders of the Forum within a set time – frame of 30 days and send a compliance report to this Forum by 15.12.2023.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.பொன்சாமுவேல்,
எண்.9, வள்ளுவர் தெரு,
மிட்டணமல்லி,
சென்னை – 600 055.

2) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி.

3) முதன்மை செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்